# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 28/2018**

பெயர்: **கனகராஜ்** நாள்: 04.11.2023

பி.வா.சா.1 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – கனகராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.55</u>

அசல் வழக்கை தட உரிமைக்காக வாதி தாக்கல் செய்துள்ளார். என்மீதும் மற்றும் 3 நபர்கள்மீதும் வாதி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி சர்வே எண் 182/6ல் செல்லும் பொதுப்பணித்துறை வாய்க்காலை பொறுத்து வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேட்டுா அணையிலிருந்து வரும் கிழக்குகரை வாய்க்கால் மூலமாக தண்ணீரை விவசாயத்திற்காக தண்ணீர் பெற அரசாங்கம் வழிவகை செய்துள்ளார்கள். கிழக்குகரை வாய்க்கால் சுமார் 70 அடி அகலத்தில் உள்ளது என்றால், சரிதான். கிழக்குகரை கால்வாயிலிருந்து பிரியும் கிளை வாய்க்கால்களையும் பொதுப்பணித் துறைதான் நிர்வகித்து வருகிறார்கள். வழக்கு வாய்க்காலும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில்தான் உள்ளது. கிழக்கு வரை வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால் மட்டுந்தான் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது என்றால், சரியல்ல. பிரதான வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால், நடவுநீர் பாசன வாய்க்காலும் பொதுப் பணி துறையின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. மேற்படி மூன்று வாய்க்காலையும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் வைத்துள்ளது என்பதை முதன்மை சாட்சியம் மற்றும் எதிர் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை.

2) கிளை வாய்க்காலின் அகலம் 4.8 மீட்டர் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. கிளை வாய்க்காலில் தண்ணீர் செல்லும் பகுதி மற்றும் இருபுற கரைகளும் சேர்த்து சுமார் 15 அடி அகலத்தில் இருக்கும் என்றால், சரியல்ல. சுமார் 3 அடி அகலம்தான் உள்ளது. மேட்டுர் கிழக்குகரை மதகை ஒட்டிதான் என்னுடைய நிலம் உள்ளது. மதகை ஒட்டி 2ம் பிரதிவாதி சித்தையன் நிலம் உள்ளது. என்னுடைய நிலத்தை ஒட்டிதான் வாதியின் நிலம் உள்ளது. வாய்க்காலிலிருந்து

அவரவர்களது நிலத்திற்கு செல்வதற்கு நீர்பாசன வாய்க்காலை பொதுப்பணித்துறை அமைத்து கொடுத்துள்ளது. கிழக்குகரை வாய்க்காலில் சுமார் 500 கன அடி நீர் விடப்படும். அதேபோல் கிளை வாய்க்காலில் சுமார் 100 கன அடி நீர் விடப்படும் என்பதால், அதன் அளவு சுமார் 15 அடியாக இருக்கும் என்று சொன்னால், சரியல்ல. கான்கிரீட்டால் அமைக்கப்பட்ட வாய்க்கால்தான் உள்ளது. கிழக்குகரை கால்வாய், கிளை வாய்க்கால் மற்றும் நீர்பாசன வாய்க்கால் செல்கிறது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகளின் நிலங்கள் விவசாய நிலங்களாகும். வாய்க்காலில் தண்ணீர் செல்லாதபோது, வாய்க்காலின் இருபுறமும் உள்ள கரைகளின் வழியாக சென்றுதான் டிராக்டர் மூலமாக நிலங்கள் விவசாயம் செய்யப்படும் என்று சொன்னால், சரியல்ல. மாணிக்கம் மற்றும் பழனிசாமி நிலங்களின் வழியாகத்தான் என்னுடைய நிலத்திற்கு டிராக்டரை கொண்டு சென்று உழவடை செய்கிறேன். மேற்படி விபரத்தை எதிர் வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. மாணிக்கம் மற்றும் பழனிசாமியை சாட்சியாக விசாரிக்க போகிறோமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எனக்கு வழக்கு வாய்க்காலை ஒட்டியுள்ள விவசாய நிலத்தை தவிர வேறு எந்த நிலமும் இல்லை. வாதி சின்னபையன் எங்கு குடியிருக்கிறார் என்பதும், அவருக்கு எந்தெந்த பகுதிகளில் நிலங்கள் உள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியாது.

3) சர்வே எண் 182/6 ல் எனக்கு வீடு உள்ளது. அந்த வீடானது கிழமேலாக செல்லும் வாய்க்காலுக்கு தெற்கே உள்ளது. நான் வீட்டை ஒட்டி செல்லும் வாய்க்காலை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்றாலும், அதனால் தான் வாதி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், சரியல்ல. அவ்வப்பொழுது வாய்க்காலானது பொதுப்பணித்துறையால் சீரமைக்கப்படும். பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் எந்த சர்வே எண்ணுக்கு சம்பந்தப்பட்டது என்ற விபரத்தை முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன், அது சர்வே எண் 182/6 க்கு சம்பந்தப்பட்டதாகும். பி.வா.சா.ஆ,2, 3 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லையென்பதால், அவைகளை சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால், சரியல்ல. பொதுப் பணித்துறைக்கு சம்பந்தப்பட்ட வாய்க்காலுக்கு எந்த சேதாரமும் ஏற்படுத்தக்கூடாது என்றுதான் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல.

4) நான் முதன்மை சாட்சியத்தில் உள்ள இடதுகரை நன்னீர் யாயும் நடைநீர் வாய்க்கால் என்று கூறியுள்ளது, கிழக்குகரை வாய்க்காலிலிருந்து பிரியும் கிளை வாய்க்காலைதான் கூறியுள்ளேன் என்றாலும், அதன் அகலம் 15 அடி என்றாலும், சரியல்ல. நான் வாதிக்கு இடைஞ்சல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில், எதிர் உரையில் கூறாத சங்கதிகளை முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வாய்க்காலானது சுமார் 300 மீட்டர் தூரத்திற்கு செல்கிறது. அந்த 300 மீட்டர் தூரத்திற்கும் வடக்கு மற்றும் தெற்குபுறத்தில் விவசாய நிலங்கள் உள்ளது. 300 மீட்டர் தூரத்திற்கு பிறகு வாய்க்காலானது நடவுநீர் பாசனத்திற்காக செல்கிறது. நடவுநீர் செல்லும் வாய்க்காலானது பட்டா நிலங்களின் வழியாக செல்கிறது. வாதி கோரியுள்ளவாறு வழக்கு தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.20

ஒப்பம்/கனகராஜ்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.